# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2015 யு'லை

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

ஒரு புதிய பாடத்திட்டத்தின் கீழும் ஒரு புதிய கட்டமைப்பின் கீழும் பொருளியல் வினாப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாப்பத்திரத்திற்கு வெற்றி கரமாக முகங்கொடுத்திருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் தேர்ச்சி மட்டத்தினை அடையாதவர்களாக இருந்தமைக்கான பொதுவான காரணங்களாக பின்வருவன அடையாளங் காணப்பட்டுள்ளன.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – 40 புள்ளிகள்

இந்த வினா, நியாயமானளவு முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கிக் கட்டமைக்கப்பட்டி ருந்ததுடன் பரீட்சார்த்திகள் ஏதோ ஒரு வழியில் பாடத்திட்டம் மீதான தங்களது அறிவைப் பயன்படுத்தியதன் மூலம் அதிகபட்சப் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

ஒட்டுமொத்தத்தில், அதிகளவான பரீட்சார்த்திகளின் தேர்ச்சி மட்டம் மொத்தமான 40 புள்ளிகளில் 20 - 30 என்ற வீச்சினுள் காணப்பட்டது. பரீட்சார்த்திகள் வினாக்களின் பல்வேறு வகைகளுக்கு விடையளிப்பதில் தோல்வி கண்டிருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பின்வரும் பலவீனங்கள் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்டன.

**வினா இல. 1.8**

பரீட்சார்த்திகள் 2014 ம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடையாளம் காணத் தவறியிருந்தனர். இதற்கான காரணங்களாக பாடத்துடன் சம்பந்தப்பட்ட மேலதிக வாசிப்புகளை செய்திராமை மற்றும் நடைமுறை அறிவு போதுமானதாக இல்லாமை என்பன இருந்திருக்கலாம்.

**வினா இல. 1.11 -1.15**

''சரியானதா'' அல்லது ''தவறானதா'' என்பதை அடையாளம் காணுகின்ற இந்த 05 வினாக்களுக்கும் அநேகமாக வெற்றிகரமான விடைகளை அவதானிக்க முடியவில்லை. பல பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது இரு வினாக்களுக்காவது சரியான விடையை வழங்கத் தவறியிருந்தனர். எல்லைப் பயன், எல்லைக் கிரயம் மற்றும் சராசரிக் கிரயம் ஆகிய பரப்புக்கள் மீது மட்டுப்படுத்தப்பட்ட அறிவையே அவர்கள் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

**வினா இல. 1.19 -1.20**

நிறை போட்டிச் சந்தைக் கட்டமைப்பு மற்றும் அதன் இலாபத்தை உச்சப்படுத்தும் கிரய நிபந்தனைகள் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினைப் பரீட்சார்த்திகள் அடையாதிருந்தமை இந்த வினாவுக்கு விடையளிப்பதில் நிரூபணமாகியுள்ள பலவீனங்கள் மூலம் தெரிய வருகிறது.

இந்த வினாக்களுக்கு விடையளிக்கப்பட்ட வீதம் மிகக் குறைந்த மட்டத்தில் இருந்ததுடன் அதில் மிகச் சிலருக்கே சரியான விடையினை அடையாளம் காண முடிந்திருந்தது. எனவே, பரீட்சார்த்திகள் சந்தைக் கட்டமைப்புகள் மற்றும் கிரயங்கள் மீது துல்லியமான அறிவினைப் பெற்றுக்கொள்ள அக்கறை காட்டுதல் வேண்டும்.

மேலும், ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே வினா இல.1.4, 1.5 மற்றும் 1.9 ஆகியவற்றுக்குச் சரியாக விடையளித்திருந்தனர்.

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி 04 வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

**வினா இல. 02** - 08 புள்ளிகள்

**(a)** பலர் மனித ‘‘தேவைகள்’’ மற்றும் ‘‘விருப்பங்கள்’’ ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்கியதன் மூலம் அதிகபட்சப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சிலர் மட்டுமே வேறுபாடுகளை விளக்கும்போது உதாரணங்களை வழங்காததன் காரணமாக அதிகபட்சப் புள்ளிகளைப் பெறும் வாய்ப்பினை இழந்திருந்தனர்.

**(b)** இந்த வினா, பொருளியலின் அடிப்படையான கிடைப்பருமை மிக்க வடிவங்களைத் துணிவதற்கு தர்க்க ரீதியாக மதிப்பிடும் வேறுபட்ட தோற்றங்களில் பரீட்சார்த்திகளின் அறிவு மட்டத்தை மதிப்பிட எதிர்பார்த்தது. கிடைப்பருமை என்பதை வரைவிலக்கணப்படுத்துவதில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றி கண்டிருந்த போதிலும் பின்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன.

- எதிர்பார்க்கப்பட்டவாறு கிடைப்பருமை ஆனது அதன் பொருளாதாரத் தொடர்புடைமை யுடன் சரியாகத் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.
- கிடைப்பருமை ஒப்பீட்டு ரீதியில் விளங்கப்படுத்தப்படவில்லை.
- அவர்களுடைய விடைகளில், தேர்வு எண்ணக்கருக்களுக்கு இடையிலான உள்ளகத் தொடர்புடைமை, வளங்களின் மாற்றீடான பாவனைகள் மற்றும் வாய்ப்புக் கிரயம் ஆகியன உள்ளடக்கப்படவில்லை,

பல பரீட்சார்த்திகளுக்கு இந்த வினாவிற்காகப் பெறப்பட்ட புள்ளிகள், ஒட்டுமொத்த உயர் புள்ளிகள் பெறுவதை நோக்கிப் பங்களிப்புச் செய்திருந்தன.

**வினா இல. 03** - 08 புள்ளிகள்

**(a)** நிறை போட்டியின் கீழ் ஒரு நிறுவனத்தின் நீண்ட காலச் சமநிலையை வரைபு ரீதியாக முன்வைப்பது தொடர்பான இந்த வினாவை எதிர்கொள்வதில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர். கிரய வளையிகள் மற்றும் அதன் நடத்தைகள் எவ்வாறு சமநிலையைப் பாதிக்கின்றன என்பதைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் புரிந்து கொள்ளவில்லை என்பதை பின்வரும் பலவீனங்கள் சான்று பகர்கின்றன.

- நிறை போட்டி நிறுவனம் ஒன்றில் நீண்ட காலச் சமநிலைக்குப் பதிலாக கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளுடனான சந்தைச் சமநிலையை விளக்குதல்
- வினாவுக்கு எந்தவிதத் தொடர்பும் அற்ற வரைபுகளைக் கீறியிருந்தமை
- வரைபுகளின் அடிப்படையில் தர்க்க ரீதியான விளக்கங்களை வழங்காமை

**(b)** ஒப்பீட்டளவில் இந்த வினாவுக்குப் பலரிடமிருந்து சரியான விடைகள் கிடைத்திருந்தன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் நிறை போட்டியின் அம்சங்களையோ அல்லது சந்தைப் பொருளாதாரத்தின் அம்சங்களையோ வழங்கியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. ஒட்டுமொத்தமாக பரீட்சார்த்திகளின் விடைகளின் அடிப்படையில் பார்க்கும்போது சந்தைக் கட்டமைப்பு மற்றும் கிரயங்கள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தைவிட அவர்கள் குறைந்த அளவு விளக்கங்களையே கொண்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

**வினா இல. 04** - 08 புள்ளிகள்

**(a)** பணத்தின் பெறுமதி என்னும் எண்ணக்கருவைச் சரியாக அடையாளங் காண்பதில் காணப்பட்ட திறமையின்மை காரணமாக, பணத்தின் பெறுமதி என்பதற்குப் பதிலாக பணத்திற்கான வரைவிலக்கணம், பணத்தின் அம்சங்கள், பணத்தின் பரிணாமம், பணத்திற்கான கேள்வி போன்றவை தொடர்பில் தேவையற்ற விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் உள்ளக பெறுமதி மற்றும் வெளிவாரியான பெறுமதி, உள்ளக அதிகாரபு'ர்வ பெறுமதி மற்றும் உள்ளக உண்மைப் பெறுமதி ஆகியவற்றின் எண்ணக்கருக்களைச் சரியாக அடையாளங் கண்டிருந்த அதே வேளை வேறு சில பரீட்சார்த்திகள் எண்ணக்கருக்களைச் சரியாக அடையாளம் கண்டிருந்த போதிலும் அவர்கள் ''உள்ளக உண்மைப் பெறுமதி'' என்ற பதத்தை குறிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

**(b)** இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்த பரீட்சார்த்திகள், பொதுவான ஆனால் குறுகிய நிகழ்வுகளை விரிவுபடுத்தியதன் ஊடாக பொது விலை மட்டத்தின் உயர்ச்சியால் ஏற்படும் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களை எடுத்துக் காட்டியிருந்தனர்.

ஒட்டுமொத்தமாக, இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கத் தவறிய பரீட்சார்த்திகளில் சிலரது விடைகளில் பின்வரும் சில பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- தொடர்பில்லாத விளைவுகளை எழுதியிருந்தமை (இறக்குமதிகள், ஏற்றுமதிகள், வெளிநாட்டுக் கடன்கள் போன்றவை)
- பிழையான நிகழ்வுகளை எழுதியிருந்தமை (வாழ்க்கைத் தர உயர்வு, பொருளாதார வளர்ச்சி போன்றவை)
- பொது விலை மட்டத்தின் உயர்ச்சியானது பொருளாதாரம் மீது சாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்தியிருந்தமை
- பொது விலை மட்ட உயர்ச்சியின் ஒரு விளைவாகப் பணவீக்கத்தைக் காட்டியிருந்தமை

**வினா இல. 05** - 08 புள்ளிகள்

**(a)** ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே இந்த வினாவுக்கு விடையளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ''சென்மதி நிலுவை'' என்பதன் கருத்தை விளக்குவதில் மிகவும் தோல்வி அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். பல பரீட்சார்த்திகள் ''சென்மதி நிலுவை'' பற்றி ஒரு தோராயமான விளக்கத்தினைக்கூட கொண்டிருக்கவில்லை என்பதைத் தரப்பட்ட விடைகள் உறுதிப்படுத்துகின்றன.

உதாரணம் : ஒரு கொடுப்பனவைச் செய்ததன் பின்னரான நிலுவை, கொடுப்பனவிற்காகத் தொடர்ந்தும் காணப்படும் நிலுவை

**(b)** மேலுள்ள பாடப் பரப்பில் காணப்பட்ட விழிப்பற்ற தன்மை இந்தப் பகுதிக்கு விடை அளிப்பதிலும் தோல்வியையும் உறுதி குறைந்த நிலையினையும் தொடர்ந்தும் ஏற்படுத்தியது. பொருளாதாரக் கொள்கைகள், நாணயக் கொள்கைகள் மற்றும் இறைக் கொள்கைகள் போன்ற மறைமுகமாகத் தொடர்புபட்ட பொதுவான நிகழ்வுகள் அத்துடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகம் என்பன வழங்கப்பட்ட விடைகள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டன.

ஒட்டுமொத்தத்தில் சென்மதி நிலுவையுடன் தொடர்புபட்ட பாட விடயங்கள் பற்றிய ஒரு தோராயமான விளக்கம்கூட பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை, எனவே இதில் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி C

**வினா இல. 06** - 14 புள்ளிகள்

**(a)** பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். இருந்த போதிலும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் வரிப்படத்தினைச் சரியாக கீறியிருந்தும் அவர்கள் அதனை வெற்றிகரமாக விளங்கப்படுத்துவதற்கு தவறியிருந்தனர். இரு துறைப் பொருளாதாரத்தினை (03 அல்லது 04 துறை உட்பட) அடையாளங் காணத் தவறியதான பல பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள், மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடுவதுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதிகமாக, ''நடைமுறை விலை'' மற்றும் ''நிலையான விலை'' ஆகிய எண்ணக்கருக்கள் அதனது சொல் சார்ந்த கருத்தின் மூலமாக மட்டுமே விவரிக்கப்பட்டிருந்தது. சரியான வரைவிலக்கணங்கள் மற்றும் விவரிப்புகள் என்பன ஒரு குறைந்த மட்டத்திலேயே பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்டன.

உதாரணம்: குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் ''நிலையான விலை'' என்பதற்கு ''மாற்றமடையாத விலை'' என எழுதியிருந்தனர்.

**(c)** சராசரியாக, பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளை வெற்றிகரமாகச் செய்திருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் காரணிக் கிரய விலை மற்றும் சந்தை விலை ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புடைமையை சரியாக அடையாளங் காண்பதற்குத் தவறியிருந்தனர்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- நேரில் வரிகள் மற்றும் சலுகைகளுக்கான செம்மையாக்கங்கள் சரியாகச் செய்யப்படவில்லை
- நிகர வெளிநாட்டுக் காரணி வருமானத்தைச் எங்கே செம்மையாக்கம் செய்வது என்பது சரியாக அடையாளங் காணப்படவில்லை.
- இறுதிப் பெறுமதியை அணுகுவதற்கான முன் வேலைகள் (செய்கை வழி) தரப்படவில்லை

**வினா இல. 07** - 14 புள்ளிகள்

**(a)** சரியான வரைவிலக்கணங்களுடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குவதற்கு பல பரீட்சார்த்திகள் அடிப்படை எண்ணக்கரு பற்றிய அறிவின்றி அவர்களது அறிவு மட்டத்தின்படி, சுயமாக விடை அளித்திருந்தனர்.

உட்கட்டமைப்பின் மேம்பாடு அல்லது பொருளாதாரத்தின் மேலதிக வளர்ச்சியை பொருளாதார அபிவிருத்தியாக விவரித்ததன் காரணமாக விடைகள் தோல்வியடைந்திருந்தன. மேலும், வளர்ச்சியானது ஒரு குறுகிய கால முன்னேற்றமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்த அதே வேளை அபிவிருத்தி ஒரு நீண்ட கால முன்னேற்றமாகக் காட்டப்பட்டிருந்ததுடன் உற்பத்தி சாத்திய எல்லைக்கோட்டு வளையிகள் ஊடாக விவரிக்கவும் முனைப்புக் காட்டப்பட்டிருந்தது.

(b) பொருளாதார வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான காரணிகளை அடையாளங் காண்பதில் பரீட்சார்த்திகள் நல்லதொரு வெற்றியினை அடைந்திருந்தனர். அதே நேரம் குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் அத்தகைய நிகழ்வுகளை துல்லியமாக அடையாளங் கண்டதன் மூலம் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் சிலர் வினாவினைச் சரியாக விளங்கிக் கொள்ளாது தொடர்பில்லாத நிகழ்வுகளை எழுதியிருந்தமையும் அவதானிக்கப் பட்டது.

உதாரணம்: மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலா வருமானம், உற்பத்திக் காரணிகள், பொருளாதார உட்கட்டமைப்பு போன்றவை குறிப்பிடப்பட்டிருந்தன.

**(c)** ஒப்பீட்டளவில், இந்த வினாவுக்குப் பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். பொருளாதார மற்றும் சமூக நலன்புரியை மேம்படுத்துவதற்காக சந்தையில் அரசாங்கம் தலையீடு செய்கின்ற வழிகளைத் தொகுக்கும் பொருட்டு, பரீட்சார்த்திகள் அண்மையில் இலங்கையில் அரசாங்கத்தினால் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்ட குறுக்கீடுகள் மீதான தங்களது அறிவினைக் பயன்படுத்த வேண்டும் எனக் கருதியிருக்க முடியும். பெரும்பாலானவர்கள் இந்த வினாவுக்காக நியாயமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

ஒட்டுமொத்தத்தில், பல பரீட்சார்த்திகள் தங்களது சொந்த விளக்கங்களுக்கு இணங்க இந்த வினாவுக்கு சுயமாக விடையளித்திருந்தனர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகள் பரீட்சையின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு கருத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

1. புதிய பாடத்திட்டத்தைப் பு‘ரணமாகவும் ஆழமாகவும் கற்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தைச் செலுத்தவும்.
2. வினாவினை பல தடவைகள் வாசித்த பின் அங்கு குறிப்பிட்ட நேரடியான விடைகளை எதிர்பார்க்கும் சந்தர்ப்பங்களில் தேவையற்ற விளக்கங்கள் / விபரங்களை எழுதுதல் கூடாது.
3. வரைவிலக்கணங்களுடன் கூடிய வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச் சொல்லினைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. இந்தப் பாடத்துடன் தொடர்புபட்ட புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனையவற்றை வாசியுங்கள்.
5. வரைபுகளில் முறையான பெயரிடலும் விவரிப்பும்
6. விடையளிக்கும்போது அடிப்படையான கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக அடையாளங் கண்டு ஒப்பீடு செய்வதற்குத் தேவையான தேர்ச்சிகளைக் கட்டி யெழுப்புங்கள்.
7. கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாகவும் உரிய இடத்தில் இருப்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.
8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
9. கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளை ஆராய்வதன் மூலம் உங்களுடைய அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.
10. பொருளாதார எண்ணக்கருக்களின் சரியானதொரு விளக்கத்தின் மூலம் அந்த எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைத்துக்கொள்ள முடியும்.
11. முறையான நேர முகாமைத்துவம்
12. விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்கள் சரியான இடங்களில் இடப்பட்டுள்ளதா என்பதை முறையாகப் பரீட்சிக்கவும்.
13. முன்னேற்பாடு மற்றும் புள்ளிகளைப் பெறுகின்ற மிகுந்த எதிர்பார்ப்புடன் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -